செ.வெ.எண். 761 நாள் - 17.12.12

அரசுப் பொருட்காட்சித் தொடக்கவிழா
சேலம்
நாள் 16.12.2012

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை

அமைச்சர் அவர்கள் உரை

====

முக்கனிகளில் முதல் கனியாம் மாம்பழத்தை மக்களுக்கு வழங்கி
எல்லோர் நினைவிலும் இனிமை நிறைந்திருக்கும் சேலம் மாநகரத்தில்,
இன்று நடைபெறும் அரசுப் பொருட்காட்சியைத் தொடங்கிவைக்கும்
நல்வாய்ப்பினை எனக்கு வழங்கிய
மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா
அவர்களுக்கு, எனது முதற்கண் நன்றியையும்
வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சிறப்புமிகு விழாவிற்குத் தலைமையேற்றுள்ள
மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்களே,

அனைவரையும் வரவேற்று உரையாற்றிய
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க. மகரபூஷணம் இ.ஆ.ப அவர்களே,

விளக்க உரை ஆற்றிய
செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர்
திரு. ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப. அவர்களே

இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கிய
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

வணக்கத்திற்குரிய சேலம் மாநகர மேயர் அவர்களே,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

நிறைவாக நன்றியுரை ஆற்ற உள்ள
இணை இயக்குநர் (பொருட்காட்சி) திரு கு தானப்பா அவர்களே,
,

அரசுத் துறை அலுவலர்களே,
பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களே,
உங்கள் அனைவருக்கும் எனது
வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாங்கனி மாநகரமான சேலத்து மக்கள்
மாங்கனிபோல இனிமையானவர்கள் மட்டுமல்ல,
இரும்பைப் போல உறுதி படைத்தவர்கள் என
வரலாறு அறிந்தவர்கள் உணரமுடியும்.
இத்தகைய வரலாற்றுச் சிறப்புக்குரிய சேலம் மாநகரில்
இன்றைய தினம் அரசுப் பொருட்காட்சி தொடங்கப்பட்டிருக்கிறது.

புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கிற
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு,
மக்கள் நலச் சிந்தனைகளை சுமந்து கொண்டு
மாபெரும் திட்டங்களை நாள்தோறும் உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது.

ஒரு கோடியே 95 இலட்சம் குடும்பங்களுக்கு
மாதந்தோறும் விலையில்லா அரசு வழங்கி
ஏழை எளியோரின் பசிப்பிணியைப் போக்கும் புனிதமான பணியை
மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டுள்ளது.

ஏழைப்பெண்கள் எல்லோரும் கல்வி கற்கவேண்டும் என்ற உயர்ந்த
எண்ணத்தின் அடிப்படையில்,
படித்த ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு
25 ஆயிரம் ரூபாய் நிதிஉதவியுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம்;
இளநிலைப்பட்டம் அல்லது பட்டயம் பெற்ற ஏழைப்பெண்களின்
திருமணத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவியுடன் தாலிக்கு 4 கிராம் தங்கம்;

முதியோர், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், ஆகியோருக்கு
மாத உதவித்தொகை ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கும் திட்டம்;

மீன்பிடித்தடைக் காலத்தில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு
ரூ. 2,000 ஆக உதவித் தொகை உயர்த்தி வழங்கும் திட்டம்;

மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு
ரூ. 4,000 நிவாரண உதவி வழங்கும் திட்டம்;

மாணவச் செல்வங்கள் கணினி அறிவில் சிறந்து விளங்கவும்,
உலக மக்களோடு போட்டி போடும் அளவுக்கு உயர்ந்திடவும்
விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம்;
என எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு
அக்கறையோடு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு
செயல்படுத்தி வரும் மக்கள் நலத் திட்டங்களை
ஏழை, எளிய பாமர மக்களுக்கு நேரடியாக
விளக்கிச் சொல்லும் உன்னதமான பணியை
செய்தித்துறை பொருட்காட்சிகளின் வாயிலாகச் செய்துவருகிறது.

அரசின் திட்டங்களையும், சாதனைகளையும், செயல்பாடுகளையும்
மக்களுக்கு கொண்டு செல்லும் இணைப்புப் பாலமாகச்
செயல்பட்டு வருகிறது செய்தித் துறை

அதுமட்டுமல்ல,
சமுதாயத்தின் எளிய பிரிவினருக்கு மட்டுமல்லாமல்,
புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கும்
மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு
பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதையும்
எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட 40 வயது பூர்த்தியான திருநங்கைகளுக்கு
மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் வழங்கும்
மனிதநேயத் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர்
டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கிவைத்து,
நடப்பு ஆண்டிற்கு ஒரு கோடியே 18 இலட்சம் ரூபாயை
ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

மக்கள் நல்வாழ்வில் மாறாத அக்கறையுடன் நலத்திட்டங்களை
வழங்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு,
கால்நடைகளின் நலனிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

அந்த வகையில் கால்நடை மருத்துவ வசதி இல்லாத
குக்கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு
மருத்துவ வசதி அளிப்பதற்காக ஒரு கோடியே 6 இலட்சம் செலவில்
50 கால்நடைக் கிளை நிலையங்களை தொடங்க
அண்மையில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்

ஆணையிட்டுள்ளார்கள்.

நாளும் திட்டங்களைத் தரும் திறன் மிகுந்த அரசாக
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு திகழ்ந்து வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த
சீர்மிகு திட்டங்களையெல்லாம் செயலாக்கம் செய்துவரும்
அரசுத்துறைகள் தங்களது அரங்குகளை மிக அழகாக
இங்கே அமைத்திருக்கின்றன.

அரசின் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி
என்பதைப் பற்றி அந்த அரங்குகளில் பொதுமக்கள்
நேரடியாக கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஏழை எளிய, உழைக்கும் மக்கள்,
பள்ளி கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள்,
வயது முதிர்ந்தோர் என
அனைவரும் தங்களது நேரத்தை
பயனுள்ள வகையில் செலவிட்டு துறை சார்ந்த தகவல்களைப் பெறவும்,
பல்வேறு வகையான பொழுதுபோக்கு
அம்சங்களை பயன்படுத்தி மகிழ்ச்சி
அடையவும், இங்கு வகை செய்யப்பட்டுள்ளன.

மேலும், வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்களைக் கொண்ட
தனியார் அரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இவையன்றி, நாள்தோறும் சிறந்த கலை நிகழ்ச்சிகளும்
நடைபெற இருக்கின்றன.

இவ்வகையில், எல்லாத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில்
உருவாக்கப்பட்டுள்ள அரசுப் பொருட்காட்சிக்கு அனைவரும்
வருகை தந்து பயன்பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் மனங்கள் நிறைய,
மகத்தான திட்டங்களை வழங்கி வரும்
மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்
தலைமையிலான அரசுக்கு
மக்கள் என்றென்றும் துணையிருப்பார்கள் என்று தெரிவித்து

இந்த சிறப்பு மிகுந்த அரசுப் பொருட்காட்சியைத்
அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்
இங்கே பேசிய மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை
அமைச்சர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் வருகிற
ஆண்டிலிருந்து ஆடிப்பண்டிகையையொட்டி பொருட்காட்சி
நடத்தப்பட வேண்டும் என்று இதன் மூலம்
அனைத்துத் தரப்பு மக்களும் கிராமப்புற மக்களும்
அதிக அளவில் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்தார்கள்.

அதற்கேற்றபடி வருகிற ஆண்டிலிருந்து ஆடிப்பண்டிகையொட்டி அரசு பொருட்காட்சி நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

இத்தகைய பொருட்காட்சிகளின் மூலம் கிராமப்புறங்கள் மற்றும் நகர்புறங்களில் வாழும் மக்கள் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை நன்கு அறிந்து அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.

---------

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.